செ.வெ.எண்: 326/2016 நாள்: 03.06.2016

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
கன்னியாகுமரி மாவட்டம்
(இ) நாகர்கோவில்

# செய்திக்குறிப்பு

செ.மு.எண்:ல1/1862/2016, நாள்:03.06.2016

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் காலியாக உள்ள சத்துணவு அமைப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு கடந்த 09.03.2016,10.03.2016, 11.03.2016 ஆகிய மூன்று நாட்களில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நேர்காணல் நிகழ்வு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்ததால் ஒத்திவைக்கப்பட்டது. எனவே, இராஜாக்கமங்கலம், குருந்தன்கோடு, கிள்ளியூர், முஞ்சிறை, மேல்புறம் ஆகிய வட்டாரங்களில் அமைப்பாளர்/சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு மேற்படி நேர்காணலுக்கு விண்ணப்பம் பதிவுசெய்து அழைப்புக்கடிதம் பெற்ற விண்ணப்பத்தாரர்களுக்கு வரும் **11.06.2016 சனிக்கிழமை காலை 10 மணி முதல் நாகர்கோவில் SLB அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி**யில் நேர்காணல்கள் நடைபெறவுள்ளன.

| நாள் | நேரம் | வட்டாரங்கள் | காலிபணியிடங்கள் | |
|---|---|---|---|---|
| | | | அமைப்பாளர்கள் | சமையல் உதவியாளர்கள் |
| 11.06.2016 | காலை 10.00 மணி | இராஜாக்கமங்கலம், குருந்தன்கோடு | 31 | 33 |
| | | | 31 | 22 |
| | | கிள்ளியூர், முஞ்சிறை | 22 | 12 |
| | | | 15 | 14 |
| | | மேல்புறம் | 18 | 26 |
| | | **மொத்தம்** | **117** | **107** |

எனவே, ஏற்கனவே விண்ணப்பம் பதிவுசெய்து அழைப்புக்கடிதம் பெற்றவர்கள் மட்டும் தமது நேர்காணல் அழைப்புக்கடிதம், அசல் சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களுடன் நேர்காணலில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. இந்த நியமனம் முற்றிலும் தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் நடைபெறும் என்பதால், பொய்யான செய்திகளை நம்பி நியமனத்திற்காக யாருக்கும் பணம் கொடுத்து ஏமாறவேண்டாம் என விண்ணப்பதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**கன்னியாகுமரி மாவட்டம்**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.